DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No. 55/2023**

**prosecution witness: Pw - 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

A1, A2 present

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இன்னாசி லியோன் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**07.11.2023**

முதல் விசாரணை **:-**

1. நான் பாம்பனில் வசித்து வருகிறேன். மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 ஐ தெரியும். சுமார் 6 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 04.00 மணியளவில் நான் என் வீட்டிற்கு வந்த போது அ.சா.1 எனக்கு போன் செய்து சண்டை நடப்பதாக கூறினார். நான் அங்கு அவரது வீட்டிற்கு சென்ற போது என் தங்கையின் கணவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டிருந்தது. 1வது எதிரிக்கு காயம் ஏற்பட்டிருந்தது. நான் அவர்களை சமாதானம் செய்து மருத்துவமனைக்கு அழைத்துசென்றேன். அ.சா.1 சம்பவ நேரத்தில் கற்பமாக இருந்தார். 1ம் எதிரி அ.சா.1 ஐ மிதித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சண்டை நடக்கும் போது நான் அங்கு இல்லை என்றால் சரிதான். சம்பவ வீட்டிற்கு எத்தனை தடவை சென்றிருக்கிறேன் என்றால் 4, 5 தடசை சென்றிருக்கிறேன். அந்த வீட்டில் கிணறு எந்த திசையில் உள்ளது என்றால் எந்த திசை என்று தெரியவில்லை பின்பு சாட்சி வடக்கு பக்கம் உள்ளது என்று சொல்கிறார். எதிரிகளின் வீடு எந்த பக்கம் உள்ளது என்றால் உள்ளே சென்றவுடன் இடது பக்கம் உள்ளது. புகார்தாரர் வீடு எந்த பக்கம் உள்ளது

என்றால் பின்புறம் உள்ளது.

2. புகார்தாரர் எப்படி எனக்கு உறவினர் என்றால் எனது அம்மாவின் அக்கா மகள் ஆவார்.காயம்பட்டவரை எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு யார் யார் அழைத்துக சென்றார்கள் என்றால் நான் மட்டும் தான் அழைத்து சென்றேன் அப்போது மணி என்ன இருக்கும் என்றால் மாலை 05.30 மணி இருக்கும். 1வது எதிரிக்கு காயம் ஏற்பட்டு அவரை மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றது என்றால் நான் ஆட்டோவில் ஏற்றிவிட்டேன் அவரது மச்சான்அழைத்து சென்றார்.

3. எனது தங்கச்சியின் கணவர் இன்னேசியர் மெகலன்( பட்டியல் சாட்சி 2) 1வது எதிரியை தாக்கியதாக பாம்பன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் எனது தங்கச்சி என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லாததால் தான் கிணறு எந்த திசையில் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case no: CC.No. 55/2023**
**prosecution witness: Pw - 4**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

A1, A2 present
வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | நிக்சன் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**07.11.2023**
முதல் விசாரணை**:-**

1. நான் பாம்பனில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டுனராக பணிபுரிந்து வருகீறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. அதை நான் பாம்பன் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். அந்த கையொப்பம் அ.சா.ஆ-2 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(**அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது**.)**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை**:**

1. கடந்த 24.04.2022-ம் தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு நானும், செல்வராஜ் என்பவரும் பாம்பன் காமராஜர் நகரில் உள்ள பரலோக பெரியநாயகி என்பவரது வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த போது , அங்கு வந்த பாம்பன் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் எங்கள் இருவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் நானும், செல்வராஜ் என்பவரும் கையொப்பம் செய்தததாகவும் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.